REPORTING SECTION

1979 ஏப்ரல் 18] [திரு. ரா. உமாநாத்]

சேர்ந்தவர்கள் ஒரு பெண்ணைத் துரத்திக்கொண்டு போனார்கள். அந்த பெண் தப்பிப்பதற்காக உமாநாத் வீட்டிற்குள் புகுந்து விட்டாள். அதனால் கோபம் அடைந்த திராவிட முன்னேற்றக் கழகத்தினர் கல் வீசினார்கள் என்று பாராளுமன்ற செயலாளர் இரண்டு பப்ளிக் மீட்டிங்குகளில் பேசுகிறார். நான் சொல்ல விரும்புகிறேன், ஒரு பாராளுமன்ற செயலாளர் ஒரு மினி மினிஸ்டர் பதவி அந்தஸ்து உடையவர். அரசு அந்தஸ்து உடையவர். ஒரு இன்வெஸ்டிகேஷன் நடக்கிற இடத்திற்குப்போய் பகிரங்கமாக, மேடை போட்டு, ஒரு மினி மினிஸ்டர் அந்தஸ்தில் இருக்கக் கூடியவர் இப்படிப் பேசினால், அந்த லைன் ஆப் இன்வெஸ்டிகேஷனை இன்புளுயன்ஸ் செய்யாதா என்பதை எண்ணிப்பார்க்க வேண்டும். நாங்கள் இங்கே பேசுகிற நேரத்தில், அது இன்வெஸ்டிகேஷனை மிஸ்டைரக்ட் செய்துவிடும் என்று எங்களைப் பார்த்து சொல்கிற நேரத்தில், ஒரு மினி மினிஸ்டர் அந்தஸ்து உடையவர் பகிரங்கமாக இப்படித்தான் நடந்தது என்று டிக்ளேர் பண்ணி சொல்கிறார் என்றால் It is nothing but abject interference in investigation—absolute obstruction of free investigation. எனவே நான் சொல்லவிரும்புவது—என் வீடு தாக்கப்பட்ட சம்பவம் குறித்த புலனாய்வு செத்துப்போய்விட்டது என்று சொல்ல விரும்புகிறேன்.

அடுத்தபடியாக, நம்முடைய மாநிலத்தில் ஒரு சட்டம் . . . .

(1) ஒழுங்குப்பிரச்சினைகள்—தொடர்ச்சி.

(ஆ) அவைக்குள் இருக்கும் உறுப்பினர்களிடம் முரசொலிப் பத்திரிகை விநியோகிக்கப்பெறுவது குறித்து.

திரு. ஆர். மணிமாறன் : பாயின்ட் ஆப் ஆர்டர் சார், பேரவைத் தலைவர் அவர்களே, இந்த சபைக்குள் '' முரசொலி '' பத்திரிக்கை இப்போது அனைவருக்கும் கொடுத்து வருவதாகத் தெரிய வருகிறது. அது தங்களுடைய அனுமதியோடு இங்கே வழங்கப்பட்டு இருக்கிறதா என்று நான் கேட்டுக் கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : என் அனுமதியோடு இல்லை. ஆனாலும் அதை உடனே விசாரித்து தகவலை அவைக்குத் தரத் தயாராக இருக்கிறேன்.

(2) வரவு-செலவுத்திட்டம், 1979-80 வாக்கெடுப்பு.—தொடர்ச்சி

கோரிக்கை எண் 15. காவல்துறை.

கோரிக்கை எண் 16. தீயணைப்புப் பணிகள்.

திரு. ரா. உமாநாத் : லாரிகளில் ஆட்களை ஏற்றிக்கொண்டு போவதைப்பற்றி ஒரு தடுப்பு உத்தரவு நம்முடைய மாநிலத்தில் இப்போது இருக்கிறது. நான் கூற விரும்புகிறேன். அந்தச்

(முற்பகல் 10.30)

இந்த நோட்டீஸை வேண்டுமென்றாலும் நான் கொடுத்து விடுகிறேன். தயவு செய்து படித்துக் கொள்ளுங்கள். ஆனால் இதை யார் எழுதினார்கள் என்று பார்ப்பதை விட இதற்கான காரணம் என்ன என்பதைப் பார்த்துச் செய்யுங்கள். அதுதான் அரசாங்கத்தினுடைய கடமை. இந்த நோட்டீஸைப் பொறுத்த வரையில் அரசாங்கம் சந்தேகப்படக்கூடாது. இதிலே எந்த அரசியல் கட்சிகளுக்கும் சம்பந்தம் இல்லை. இதிலே வேறு யாரும் சம்பந்தப்படவில்லை. அவர்களுடைய கோரிக்கை மட்டும் தான் இது. அவர்களுக்கு சங்கம் அமைக்க உரிமை கோரி இருக்கிறார்கள். ஆகவே அவர்களுக்கு சங்கம் அமைக்க உரிமை கொடுத்து அதன்பிறகு பிரச்சினைகளைப்பற்றி முடித்துக் கொள்ளலாம். அதைவிட்டுவிட்டு இப்போது தூத்துக்குடியில் ஒரு ஹெட் கான்ஸ்டேபிளைச் சஸ்பெண்ட் செய்தார்களே அந்த மாதிரி எல்லாம் சஸ்பெண்ட் நடவடிக்கைகளில் ஈடுபட்டால், அடக்கு முறைகளின் மூலமாக அவர்களை அடக்க நினைத்தால் அது சரியானதாக இருக்காது. அப்படிப்பட்ட சூழ்நிலையில் கிளர்ச்சி போன்றவை ஏற்பட்டால் நாங்கள் தொழிலாளர்களை ஆதரிப்பது போன்று நிச்சயம் அவர்கள் பக்கம்தான் இருப்போம். அப்போது நீங்கள் சந்தேகிக்கக்கூடாது. ஆகவே போலீசுக்கு சங்கம் வைக்கின்ற உரிமையை வழங்கி ஆவன செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொண்டு நான் இங்கே வைத்திருக்கின்ற சில வேண்டுகோள்களைப் பரிசீலனை செய்து தக்க நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

1. ஒழுங்குப் பிரச்சினை—தொடர்ச்சி.

(ஆ) அவைக்குள் இருக்கும் உறுப்பினர்களிடம் முரசொலிப் பத்திரிகை விநியோகிக்கப் பெறுவது குறித்து—தொடர்ச்சி.

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> இன்று காலையில் அவையில் ஒரு ஒழுங்குப் பிரச்சினை எழுப்பப்பட்டது. அது குறித்து விசாரித்து விளக்கம் அளிப்பதாக நான் அறிவித்தேன். அது பற்றிய விவரமாவது :

பேரவையில் எந்த ஒரு ஏட்டையும் அவைத் தலைவர் அல்லது செயலாளர் அனுமதியின்றி உறுப்பினர்களுக்கு வழங்கக் கூடாது. ஆனால் இன்று அவையில் பணியாற்றும் ஒரு தற்காலிக கடைநிலைப் பணியாளர் அனுமதியின்றி ஒரு தினத்தாளை சில உறுப்பினர்களுக்கு வழங்கியுள்ளார். இது அவையின் ஒழுங்கு முறைக்கு விரோதமாகும். எனவே அவர் மீது தக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

சத்யமேவ ஜயதே TRUTH ALONE TRIUMPHS

*திரு. நா. சுந்தரராஜ் : தலைவரவர்களே, பாயின்ட் ஆப் ஆர்டர். எய்தவன் இருக்க அம்பை நோவதில் பயனில்லை. சாதாரண கடை நிலை ஊழியர் மீது நடவடிக்கை எடுப்பதை விட இதற்குக் காரணமானவர்கள் யார் என்பதைப் பார்த்து, அதற்குத் தகுந்த நடவடிக்கை எடுப்பதுதான் முறையானது. அதுதான் சரியாக இருக்கும் என்று கருதுகிறேன்.

திரு. என். சங்கரய்யா : தலைவரவர்களே, கடை நிலை ஊழியர்கள் அரசாங்கத் தரப்பிலிருந்தும் அதாவது சட்ட மன்ற இலாக்காக்களிலிருந்தும் பல தாள்களைக் கொண்டு வந்து கொடுக்கிறார்கள். சட்ட மன்ற இலாக்காவிலிருந்து பல தாள்களைக் கொடுத்து அனுப்புகிறார்கள். சட்ட மன்ற உறுப்பினர்கள் இங்கே அமர்ந்திருக்கின்றபோது அவர்களிடம் கொடுங்கள் என்று பல ஊழியர்களை அனுப்புகிறார்கள். அவர்கள் கொண்டு வந்து கொடுக்கிறார்கள். ஆகவே இப்போது கொண்டு வந்து கொடுக்கப்பட்டதின் உண்மையான நிலை என்ன என்பதைப் பார்க்க வேண்டுமே தவிர அந்த ஊழியர் மீது நடவடிக்கை எடுப்பது சரியானதல்ல என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. சங்கரய்யா அவர்கள் சொல்வது போல் நடவடிக்கை எடுக்காமல் சாதாரணமாக எடுத்துக்கொள்ளலாம். ஆனால் அவையில் இப்படி எல்லாம் நடப்பதற்கு நாம் அனுமதி தந்துவிடக்கூடாது. இப்படி ஏடுகள் விநியோகிக்கப்படுவதைத் கட்டுப்படுத்த வேண்டியது மரபு மட்டுமல்ல. அவையின் கௌரவத்திற்கும் இவ்வாறு விநியோகிப்பதால் இழுக்கு ஏற்படும். அதுமட்டுமல்ல. இலாக்காவிலிருந்து சிலவற்றைக் கொடுப்பது என்பது வேறு. பத்திரிகைகளை எடுத்துக் கொண்டு வந்து ஒவ்வொருவருக்கும் தருவது என்பது வேறு. ஆகவே இந்த அவையிலே அந்தப் பத்திரிகை எப்படி வந்தது? யார் அதை விநியோகிக்கும்படி கொடுத்தனுப்பினார்கள் என்பதை எல்லாம் விசாரித்தாக வேண்டும். அதற்குப் பிறகு தான் முடிவு சொல்லப்படுமே தவிர உடனடியாக முடிவு எடுக்கப் படமாட்டாது.

திரு. கூத்தகுடி ச. சண்முகம் : தலைவரவர்களே, உண்மையிலேயே அப்படி விநியோகிக்கக்கூடாது என்பதை ஏற்றுக் கொள்கிறேன். ஆனால் அதே நேரத்தில் அப்படி விநியோகிக்கக் கூடாது என்கின்ற மரபு கூடத் தெரியாத புதிதாக சேர்க்கப் பட்டுள்ள ஊழியர் கொண்டு வந்து கொடுத்திருக்கிறார். ஆகவே இதைத் தெரிந்துதான் அவர் செய்தாரா என்பதை அறிந்து கொண்டு அப்படிச் செய்திருந்தால் நடவடிக்கை எடுக்கலாம். அப்படி இல்லாமல் உடனடியாக அந்த ஊழியர் மீது நடவடிக்கை எடுப்பது பொருத்தமாக இருக்காது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உறுப்பினர்களின் ஆலோசனையை பெற்று அதற்கேற்றவாறுதான் நான் நடவடிக்கை எடுப்பேன். ஆனால் நடவடிக்கை எடுக்கக்கூடாது என்று சொன்னால் முறையாகாது. அடுத்து திரு. ஆர். மணிமாறன் அவர்களைப் பேச அழைக்கிறேன்.